00124

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை- 2021/2022

**LLU 3901/LWU 1201 -** அரசியல் அமைப்புச் சட்டம்

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 13 ஜனவரி 2023 காலம் : மு.ப 09.30 – பி.ப 12.30

ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. பாராளுமன்ற இறைமை, ஐக்கிய இராச்சியத்தில் வலுவான மற்றும் வரலாற்று ரீதியான கோட்பாட்டு ஒன்றாக இருந்த போதிலும், இரண்டாவது குடியரசு யாப்பின் பின்பு இலங்கையில் அதனுடைய முக்கியத்துவமும் இயைபுடைமையும் தவிர்க்கப்படக் கூடியதாகும். முதலாவது குடியரசு யாப்புடன் ஒப்பிடுகின்ற போது இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் அமைந்துள்ள பாராளுமன்றமானது சட்ட ரீதியாக இறைமை உடையதோ அல்லது உயரியதோ அல்ல.

   இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான அரசியல் அமைப்புகளின் கீழ் பாராளுமன்ற இறைமை எண்ணக்கருவின் பின்னனியில் மேலே தரப்பட்ட கூற்றை பகுப்பாய்வு செய்க. உமது விடையை பொருத்தமான அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. உலகில் எந்தவொரு ஜனநாயக அரசியல் அமைப்பிலும் “சட்டவாட்சி” என்ற சட்டக் கோட்பாடு ஒரு அடிப்படை அம்சமாகும். டைசியுடைய இந்தக் கோட்பாட்டின் உருவாக்கமானது இந்த சட்டக் கோட்பாட்டினுடைய பல்வேறுபட்ட சமகால பொருள் கோடல்கள் மற்றும் நவீன புரிதல்கள் ஊடாக குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
   இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புடன் தொடர்புறுத்தி இக்கூற்றின் வலிதாந்தன்மையை ஆராய்க.

   (20 புள்ளிகள்)

3. திரு. மெக்ஸ்வெல் என்பவர் மெரினோ ஜனநாயக சோசலிச குடியரசின் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆவார். அவர் மெரினோ உயர்நீதிமன்றத்தினால் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட மூன்று சிறைக்கைதிகளுக்கு விசேட ஜனாதிபதி மன்னிப்பு வழங்க தீர்மானித்துள்ளதாக அண்மையில் அறிவித்தார். மூன்று சிறைக்கைதிகளில் ஒருவர் அமைச்சர் ஒருவருடைய மிக நெருங்கிய உறவினர் என இனங்காணப்பட்டார். மேலும் இவ் அமைச்சர் ஜனாதிபதி மெக்ஸ்வெல் தலைவராக இருக்கின்ற அரசியல் கட்சியின் உறுப்பினர் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட வழக்கு ஆனது குழும பாலியல் வல்லுறவு பற்றியதாகும் என்பதுடன் அக்கால கட்டத்தில் இவ்வழக்கு தொடர்பில் பல சர்ச்சைக்குரிய செய்திகள் வெளியிடப்பட்டதுடன் குற்றவாளியை இனங்காணுவதற்கு நீதித்துறையும் அதிகமான முயற்சிகளை எடுத்தது. மேலே குறிப்பிட்ட மூன்று சிறைக் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கல் தொடர்பான ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிராக பல விமர்சனங்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்வைக்கப்பட்ட

விமர்சனங்களில் குறிப்பிட்ட மன்னிப்பானது கட்சி அக்கறையினால் தூண்டுவிக்கப்பட்டது என்ற முக்கியமான குற்றச்சாட்டு எடுத்துக்காட்டப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி மெக்ஸ்வெல் குற்றவாளிகள் தமது குற்றங்கள் தொடர்பாக வருந்துகின்றனர் என்ற நிகழ்வின் அடிப்படையில் குறிப்பிட்ட மன்னிப்பு அமைந்துள்ளது என்ற ஊடக வெளியீடொன்றை மேற்கொண்டார். ஜனாதிபதியினுடைய கூற்றின் பிரகாரம் அவர் மெரினோ அரசியல் அமைப்பில் மன்னிப்பு வழங்குவது தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட சரியான நடபடிமுறையை பின்பற்றியுள்ளார். எனினும், இம்மூன்று சிறைக்கைதிகள் தொடர்பான வழக்கில் விசாரணை நீதிபதி அத்தகைய மன்னிப்பு வழங்குதலுக்கு எதிராக அறிக்கையொன்றை மேற்கொண்டமை வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் மெரினோவுடைய நீதி அமைச்சரான திரு. கியாதோ விசாரணை நீதிபதியுடைய அறிக்கை மற்றும் மெரினோவுடைய சட்டமா அதிபரின் அறிக்கை ஆகிய இரண்டினையும் கருத்தில் எடுத்து மூன்று சிறைக்கைதிகளுக்கும் ஜனாதிபதி மன்னிப்பை பரிந்துரைப்பதாக குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான ஒரு சிவில் அமைப்பு மெக்ஸ்வெல் உடைய நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தி மெரினோ உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய எண்ணுகிறது. இவ் சிவில் அமைப்பு இவ்வழக்கு தொடர்பில் கருத்துக்களைப் பெறுவதற்கு தங்களை ஆலோசிப்பதாக கருதுக.

மெரினோ ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டம் இலங்கையை ஒத்தது எனக்கருதி கீழே தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் உமது கருத்துக்களை வழங்குக. தேவையான இடங்களில் பொருத்தமான அரசியல் அமைப்பு ஏற்பாடுகளையும் தீர்ப்பு சட்டத்தையும் குறிப்பிடுக.

(அ.) மெரினோ உயர்நீதிமன்றத்தினால் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட மூன்று சிறைக் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்குவது தொடர்பான மெக்ஸ்வெலின் நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி மெக்ஸ்வெல்லிற்கு எதிராக வழக்கிட முடியுமா? உமது விடை மன்னிப்பு வழங்குதல், சட்ட நடவடிக்கைகளில் இருந்து ஜனாதிபதியின் விடுப்பாட்டு உரிமை உள்ளடங்களாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தனிச்சிறப்பு அதிகாரம் என்பவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

(14 புள்ளிகள்)

(ஆ.) மெரீனோ பாராளுமன்றத்தினது உறுப்பினர்கள் எதேச்சதிகாரமான ஆட்சி மற்றும் மெரீனொ அரசியல் அமைப்பை மீறியமை ஆகியவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மெக்ஸ்வெல்லை பதிவியிலிருந்து நீக்க தீர்மானிக்கின்றனர். மெக்ஸ்வெல்லை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்கு மெரினோ பாராளுமன்றத்தில் பின்பற்ற வேண்டிய முறையை விளக்குக.

(06 புள்ளிகள்)

4. ஜனநாயக அரசொன்றின் நீதித்துறையானது ஏனைய துறைகளிலிருந்தும், அதனுடைய சட்டங்களை பொருள்கோடல் செய்வதில் இருந்தும் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுகிறது. எனினும் சோல்பரி அரசியல் யாப்புடன் ஒப்பிடுகின்ற போது இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான அரசியல் அமைப்புகளின் பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்றுத்துறை என்பவற்றை நீதித்துறை சுதந்திரத்தை பலவீனப்படுத்தும் வகையில் நீதித்துறை உள்ளடக்கம் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் தொடர்பிலான விடயங்களில் தலையிடுவதற்கு அனுமதிக்கின்றது.

பொருத்தமான அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி மேலே தரப்பட்ட கூற்றின் வலிதாந்தன்மையை விமர்சித்து பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

5. வலுவேறாக்க கோட்பாடு அரசாங்கத்தினுடைய பிரதான நிறுவனங்களுக்கு இடையில் அதிகாரப் பகிர்வு ஒன்று இருப்பதன் மூலம் அத்தகைய அதிகாரமானது சமூகத்தின் நலனுக்காக மாத்திரம் பிரயோகிப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக விருத்தி செய்யப்பட்டது.
இலங்கையின் குடியரசு யாப்புகளின் கீழ் உள்ள பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் தீர்ப்புச்சட்டங்களையும் குறிப்பிட்டு மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

6. திரு.ஜயன் என்பவர் பெட்ரூனியா அரச பல்கலைக்கழகத்தின் ஒரு கல்வியாளர் என்பதுடன் பெட்ரூனியா அரசின் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொழில்சார் அமைப்பின் (PAUT) தலைவரும் ஆவார். வருமான வரியை உயர் அளவில் அதிகரிக்க அண்மையில் அமுல்படுத்தப்பட்ட வருவாய் ஒழுங்கு விதிகளுக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக ஒரு நகரத்திலிருந்து பெட்ரூனியாவின் தலைநகரத்திற்கு எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்த PAUT மற்றும் ஏனைய சில தொழிற்சங்கங்கள் தீர்மானித்தன. அவர்கள் இரண்டு நாட்களுக்கு ஊர்வலமாக செல்வதுடன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்துவதற்கு பெட்ரூனியாவின் தலைநகரத்தில் உள்ள மத்திய வர்த்தக மாவட்டத்தில் (CBD) அமைந்துள்ள பெரிய மைதானமொன்றில் ஒன்று கூடுவதற்கு தீர்மானித்தனர். எதிர்ப்பு ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முதல் நாள் CBD உடைய நகரசபை, பாதுகாப்பு காரணங்களுக்காக குறிப்பிட்ட மைதானத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று கூடுவதற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்துள்ள தீர்மானத்தை திரு.ஜயன் உட்பட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு CBD நகரசபை மூலமாக அறிவிக்கப்பட்டது. எனினும், இதனையடுத்து பெட்ரூனியாவுடைய ஆளும் கட்சிக்கு ஒரு கட்சி பிரசாரக்கூட்டமொன்றை நடாத்துவதற்கு அதே மைதானம் வழங்கப்பட்டுள்ளதை திரு.ஜயன் அறிந்து கொண்டார்.

எனினும், குறிப்பிட்ட ஊர்வலமானது வேறு ஒரு இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் பெட்ரூனியாவுடைய தலைநகரத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி அலுவலக செயலகத்தின் முன்னர் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை அமைதியாக நடாத்த ஆரம்பித்தனர். குறிப்பிட்ட ஆர்ப்பாட்டம் பெட்ரூனியாவின் சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள கொவிட் - 19 சுகாதார வழிகாட்டிகளை மீறுகிறது எனக்குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கட்டளையிட்டனர். எனினும் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தாக்கியதன் காரணமாக ஆர்ப்பாட்டம் போராட்டமாக வெடித்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கட்டுக்கடங்காத வகையில் நடந்து கொண்டதாகவும் பெட்ரூனியாவின் ஜனாதிபதிக்கு எதிராக துஷ்பிரயோகமான மற்றும் தவறான மொழியை பயன்படுத்தியதாகவும் குறிப்பிட்டு ஒரு சில ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிசார் கைது செய்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களுள் திரு.ஜயனும் ஒருவர் ஆவார். பத்திரிகை அறிக்கைகளின் பிரகாரம் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள் இக்கைதுகளை மேற்கொள்ள பொலிசாருக்கு அனுசரனை வழங்கியுள்ளதாக அறியக்கிடைத்தது.

பெட்ரூனியாவின் மத்திய வைத்தியசாலையில் பணிபுரிகின்ற உபேக்ச மற்றும் சுஜீன் ஆகிய இளம் வைத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தின் பின்பு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பெட்ரூனியா அரசிற்கு எதிரான சதிமுயற்சிகளை

ஒழுங்கமைப்பதில் இவர்கள் இருவரும் பங்களிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டு அவர்கள் தமது தொழிலிருந்து இடை நிறுத்தப்பட்டனர்.

ஐயன், உபேக்ச, சுஜின் மற்றும் கைது செய்யப்பட்டு பாரபட்சமாக நடாத்தப்பட்ட ஏனைய அனைவர் சார்பிலும் PAUT பெட்ரூனியா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்ய விரும்புகின்றது.

PAUT அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்ய முடியுமா என்பது தொடர்பாக உமது அறிவுரையை நாடுகிறது. பெட்ரூனியாவின் அரசியல் அமைப்பு இலங்கையின் அரசியல் அமைப்பை ஒத்தது எனக்கருதி PAUT இற்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

வினா **<u>இலக்கம் 07 (அ)</u>** அல்லது **<u>வினா இலக்கம் 07 (ஆ)</u>** விற்கு மாத்திரம் விடையளிக்க.

7. அ. "அண்மைக்காலங்களில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பு திருத்தங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை கணிசமான அளவு குறைத்தல் மற்றும் ஆட்சியை ஜனநாயகமயப்படுத்துதல் மற்றும் அரசியல்மயப்படுத்தப்படுதலை நீக்குதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீனமான பேரவைகளையும் ஆணைக்குழுக்களையும் உருவாக்குவதை தேவைப்படுத்தியுள்ளது."

மேலே தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா?

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 18 ஆவது தொடக்கம் 21 ஆவது அரசியலமைப்பு திருத்தங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி உமது விடையை நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)

அல்லது

(07) ஆ. இலங்கையில் ஜனநாயகத்தை மேம்படுத்துவதற்கு இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் உள்ள மக்கள் தீர்ப்புடன் தொடர்புபட்ட ஏற்பாடுகளின் பங்களிப்பு மீது பகுப்பாய்வு அறிக்கையொன்றை எழுதுக.

(20 புள்ளிகள்)

8. 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் உறுப்புரை 3 பின்வருமாறு குறிப்பிடுகின்றது :

"இலங்கை குடியரசின் இறைமையானது மக்களிடம் இருப்பதுடன் பாராதீனப்படுத்தப்பட முடியாதது ஆகும். இறைமை அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமையை உள்ளடக்குகின்றது."

எனினும், இன்றைய நிலைமையில் குறிப்பிட்ட இறைமை அதிகாரமானது உண்மையில் மக்களுக்கு அல்லது அரசாங்கத்தின் பிரதான நிறுவனங்களுக்கு மற்றும் அந்நிறுவனங்களின் பதவிப் பொறுப்பாளர்களுக்கு உரித்தானதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இலங்கையில் அண்மையில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய சம்பவங்கள் காரணமாக மக்கள் கோரிக்கை விடுத்த ஒரு புதிய அரசியல் அமைப்புக் கட்டளையில் எடுத்துக்காட்டப்பட்ட விடயங்களுள் இந்த நிலமையும் ஒன்றாகும்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உள்ள பொருத்தமான உறுப்புரைகளையும் தீர்ப்புச்சட்டங்களையும் எடுத்துக்காட்டி மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது